*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# ஐங்குறுநூற்றில் பண்பாட்டுக் கூறுகள்

**ப.மணிகண்டன்**
முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

## முன்னுரை

*சங்க இலக்கியங்கள் ஒவ்வொன்றும் தமிழர்களின் பண்பாட்டுச் செய்திகளை மிகுதியாகக் கொண்டுள்ளன. தமிழர்களின் பண்பாடு கூறும் பல வகையான கூறுகளையும் அதன் சிறப்பம்சங்களையும் காணமுடிகின்றன. இதனால் ஐங்குறுநூற்றில் இருக்கின்ற பண்பாட்டுக் கூறுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

### பண்பாடு விளக்கம்

காலந்தோறும் மக்களிடையேயிருக்கும் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் அது சார்ந்த சூழல்களும் பண்பாட்டுக் கூறுகளாகும்.

*“பண்பாடு என்பது அகவளர்ச்சியை அடித்தளமாகக் கொண்டது. ஒரு சமுதாயத்திலுள்ள மக்களின் வாழ்க்கை முறையினையே பண்பாடு என்பர்”*[1] என்று முனைவர் க. காந்தி கூறுகிறார்.

### பண்பாட்டின் தேவை

இன்றைய நவீன உலகில் பண்பாட்டின் எல்லா வகையான கூறுகளையும் ஒன்றிணைத்துப் பாதுகாக்க வேண்டும். பண்பாடு நம் கலாச்சாரத்தின் சிறப்பாகும்.

சமுகத்தின் பண்பாட்டினை அந்தந்த மொழிகளில் தோன்றிய இலக்கியங்கள் உணர்த்தவல்லன. அவ்விலக்கியங்கள் கால, இடச் சூழல் அமைவுகளுக்கு ஏற்றவாறு உருவாவனவாகும்.

தனிப்பட்ட மக்களினத்தின் பண்பாட்டினை அறிவதற்கு நம்முடைய சங்க இலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றன.

### மக்களின் வாழ்வியலில் பண்பாடு

மக்களின் அன்றாட வாழ்வியலில் கலந்த ஒன்றாக பண்பாடு உள்ளது. அதன் வகையில் திருமணம், குரவைக் கூத்து, தைநீராடல், இந்திரவிழா போன்றவை வந்துள்ளன.

### திருமணம்

திருமணம் சங்ககாலம் முதல் இன்றைய நவீனகாலம் வரை தமிழர்களின் பாரம்பரியத்தை உணர்த்தும் ஒன்றாக காணமுடிகிறது.

தலைவனாகிய நீ, என்னை மணந்துகொண்டு, எனக்கு அருள் வழங்காமல், தொடியணிந்த பரத்தையரை நாடிச் சென்றாய் எனத் தலைவி தலைவனை நோக்கிக் கூறியதை,

*“மணந்தனை யருளாய் ஆயினும் பைபயத்*
*தணந்தனை யாகி, உய்ம்மோ – நும்மூர்*
*ஒண்தொடி முன்கை ஆயமும்*
*தண்டுறை ஊரன் பெண்டெனப் படற்கே”* (ஐங்.83:1-4)

இப்பாடல் வரிகளில் உணரமுடிந்தன.

மேலும்,

*“வதுவை நல் மணம்…….”*[2]

என்ற அகநானூற்றுப் பாடலில் திருமண நிகழ்வினை கூறியிருப்பதை அறியமுடிந்தன.

### குரவைக்கூத்து

கூத்து வகைகளில் ஒன்று குரவைக் கூத்தாகும். பெண்கள் ஆடும் கலைகளில் இதுவுமொன்றாகும்.

*“நெய்தல் உண்கண் நேர்இறைப் பணைத்தோள்*

*பொய்தல் ஆடிய பொய்யா மகளிர்*
*குப்பை வெண்மணல் குரவை நிறூஉம்*
*துறை கெழு கொண்கன் நல்கின்"*
(ஐங்.181:1-4)

இப்பாடல் வரிகளில் அம்மூவனார் நெய்தல் மலரைப் போன்ற கண்களையும், நுண்மையான வளையல்கள் அணிந்த இளமகளிர் குவியலான வெண்மணலில் குரவைக்கூத்தாடினர் என்பதைக் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரம் இரண்டு வகையான கூத்தினைக் கூறுகிறது. ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை போன்றவையாகும்.

*"வண்துழாய் மாலையை மாயவன் மேலிட்டுத்*
*தண்டாக் குரவை தான் உட்படுவாள்..."*[3]

ஆய்ச்சியர் குரவையில் துளசி மாலையை கண்ணனுக்கு அணிவித்து, கூத்த நூலில் கூறியுள்ள விதிமுறையைத் தவறாது குரவைக் கூத்தினைப் பெண்கள் ஆடத் தொடங்கினர்.

*"என்று யாம்*
*நிலைபாடி ஆடும் குரவையைக்*
*கண்டு நம் காதலர்*
*கைவந்தார்......"*[4]

குன்றக்குரவையில் குரவைக் கூத்து ஆடிப்பாடி வியைாடும் போது தலைவன் நம்மோடு இருப்பானென பெண்கள் கூறினர்.

**தைநீராடல்**

வாசமிகுந்த மலர்களைச் சூடிய கூந்தலையுடைய மகளிர் ஆடும் தைமாதத்துக் குளிர்ந்த பொய்கை (நீர்நிலை) இருக்கின்றதை,

*"நறுவீ ஐம்பால் மகளிராடும்*
*ஐதஇத்தண் கயம் போல"*
(ஐங்.84:3-4)

என்ற பாடல்வரிகளில் அறியமுடிந்தன.

**இந்திர விழா**

மலரைப் போல புல்லிய தலையைக் கொண்ட குயில் கூவும் ஊர் உள்ளது. அவ்வூரில் இந்திர விழா நடைபெறுகிறது. அந்த இந்திர விழாவின் போது பல பெண்களுடன் தலைவன் தேரிலிருந்தபடியேப் பேசுகிறான். இதனைக் கண்ட தலைவி, தலைவனிடம் உன்னுடையத் தேர் இப்பொழுது எவ்வூரிலுள்ளது என வினவியதை,

*"இந்திர விழவில் பூவின் அன்ன*
*புன்தலைப் பேடை வரி நிழல் அகவும்*
*இவ்வூர் மங்கையர்த் தொகுத்து இனி*
*எவ்வூர் நின்றன்று – மகிழ்ந – நின்தேரே!"*
(ஐங்.62:1-4)

இப்பாடல் வரிகளின் மூலம் உணரமுடிந்தன.

*"..........................செம்பியன்*
*விண்ணவர் தலைவனை வணங்கி, முன் நின்று,*
*'மண்ணகத்து என்தன் வானபதி தன்னுள்,*
*மேலோர் விழைய, விழாக்கோள் எடுத்த*
*நால்ஏழ் நாளினும் நன்குஇனிது உறைக' என"*[5]

மணிமேகலையில் விணணவர் தலைவன் இந்திரனை, புகார் நகரில் நடக்கும் இந்திர விழாவினைக் காண வருமாறு செம்பின் என்ற மன்னன் அழைப்பதைக் காணமுடிகிறது.

**மக்களின் உறவுநிலைகளில் பண்பாட்டுச் சிறப்புகள்**

மக்கள் எப்போதுமே தங்கள் வீட்டிற்கு வருவோரிடம் அன்பாக இருந்து வந்துள்ளனர். மேலும் நட்பு பாராட்டுவதிலும் தமிழர்களின் நாகரிகம் பெரிதும் அறியமுடியும்.

அதன் வகையில் தலைவியின் வெட்கம், விருந்து, நட்பின் சிறப்பு ஆகியவைப் பற்றி விரிவாகக் காண்போம்.

**தலைவியின் வெட்கம்**

மிகுந்த ஓசைகள் உடைய வளையல்கள் ஒலிக்கிறது. அப்போது நண்டைக் காலால் தள்ளிவிட்டு, முகத்தை மறைக்கும் கூந்தலையுடையவளாய்த் தலை குனிந்து நின்றவள் தனிமை வறுத்தும் மாலைப்பொழுதும் மறைந்துவிட்டது, தலைவி தன் அன்பை என்களிப்பாள் எனத் தலைவன் பெருமையாக தலைவியிடம் உணர்த்தியதை,

*"இலங்குவளை தெளிர்ப்ப அலவனாட்டி*
*முகம்புதை கதுப்பினள், இறைஞ்சி நின்றோளே -*
*புலம்பு கொள் மாலை மறைய –*
*நலங்கேழாக நல்குவள் எனக்கே"*
(ஐங்.197:1-4)

இப்பாடல் வரிகளின் மூலம் காணலாம்.

**விருந்து**

தமிழர்களின் பாரம்பரிய பழக்கவழக்கங்களில் ஒன்று விருந்து, வீட்டிற்கு வரும் விருந்தாளிகளுக்கு சுவையான உணவு தந்து விருந்துப்படைத்தல். அதனை,

*"பகைவர் புல்லர்க........."*
(ஐங்.4:2)

என்ற இப்பாடல் வரிகளில் எதிரியை நண்பனாக அரவணைத்து அவனுக்கு புல்லரிசிச் சோற்றினை உணவாகத்தந்து

ஓரம்போகியார் எனும் புலவர் விருந்துபடைத்துள்ளார்.

**நட்பின் சிறப்பு**

பல இதழ்களைக் கொண்ட கருங்குவளை மலருடன் நெய்தல் மலர்கள் ஒத்து வருவதைப் போன்ற குளிர்மையான துறைகளைக் கொண்டது. அந்த துறையினையுடைய தலைவனின் நட்பானது எத்தனைப் பிறவிகள் எடுத்தாலும் விலகாமலிருக்கும் எனத் தோழி தலைனை நோக்கிச் சொன்னதை,

*“பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்*
*தண்டுறை ஊரன் கேண்மை*
*வழிவழிச் சிறக்க என வேட்டோமே!”*
*(ஐங்.2:4-6)*

என்ற பாடல்வரிகளின் மூலம் காணமுடிந்தன.

*“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு”*[6]

திருவள்ளுவர் நட்பின் பெருமையை இவ்வாறு கூறியுள்ளார்.

**மக்களின் பண்பாட்டுச் சிறப்புகளில் இசை**

இசையின்றி வாழ்வில்லை எனும் தத்துவத்திற்கு ஏற்றார் போல, சங்ககால மனிதர்களும் இசையோடு ஒன்றியிருந்தனர். அதில் முழவு இசை, அரிப்பறை போன்றவைப் பற்றி காண்போம்.

**முழவு இசை**

கடல் அலைகள் ஒலிக்கும் இனிமையான ஒலியுடன் கலந்து அயலதாகிய முழவு முழங்கும் இனிய ஓசை தெருக்கள் தோறும் முழங்கும் தொண்டி நகர். இதனை,

*“திரைஇமிழ் இன்னிசை அளைஇ அயலது*
*முழவு இமிழ் இன்னிசை மறுகுதொறும் இசைக்கும்”*
*(ஐங்.171:1-2)*

என்ற இப்பாடல் வரிகள் உணர்த்தின.

**அரிப்பறை**

*“குருகுடைத் துண்ட வெள்ள கட்டியாமை*
*அரிப்பறை வினைஞர் அல்குமிசைக் கூட்டும்*
*மலரணி வாயில் பொய்கை ஊர! நீ”*
*(ஐங்.81:1-3)*

என்ற பாடல் வரிகளில் குருகுகள் வெண்மை யாமை இறைச்சியை உண்கிறது. அப்போது உழவர்கள் அரிப்பறையை முழக்குகின்றனர். அழகான மலரால் உடைய துறையின் தலைவன் நீ என பரத்தைக் கூறியதை ஓரம்போகியார் எடுத்துரைக்கின்றார்.

**முடிவுரை**

சங்க காலத்தில் பண்பாட்டுக் கூறுகள் மிகுந்திருப்பதை ஐங்குறுநூறு வழிநின்றுக் காணமுடிந்தன.

நட்பு, விருந்து, திருமணம், குரவைக் கூத்து, விழாக்கள், இசைக்கருவிகள் மேலும் பல பண்பாட்டு எச்சங்கள் மிகுந்து வந்துள்ளன.

ஐங்குறுநூறு முழுவதும் பண்பாட்டின் கூறுகள் அதிகமிருப்பதை இக்கட்டுரை வாயிலாக அறியமுடிந்தன.

தமிழர்களின் நாகரிக வளர்ச்சிக்கு சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான ஐங்குறுநூறு பெரிதும் உதவியிருக்கின்றன என்பதை காணமுடிந்தன.

**சாண்றென் விளக்கம்**

1. முனைவர் க. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் - பக்.1
2. அ. மாணிக்கனார் (உ.ஆ), அகநானூறு மூலமும் உரையும் - பா.எ.86:15
3. ஞா. மாணிக்கவாகன், சிலப்பதிகாரம் (ஆய்ச்சியர் குரவை) – பா.வரி:67-68
4. ஞா. மாணிக்கவாகன், சிலப்பதிகாரம் (குன்றக் குரவை) – பா.வரி:29-31
5. துரைதண்டபாணி (உ.ஆ), மணிமேகலை தெளிவுரை (விழாவறை காதை) - பா.வரி:4-8
6. பதிப்பகக்குழு, திருக்குறள் உரையுடன் - பா.எ.788

**பார்வை நூல்கள்**


1. அ. மாணிக்கனார் (உ.ஆ), ஐங்குறுநூறு மூலமும் உரையும்
2. முனைவர் க. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்
3. அ. மாணிக்கனார் (உ.ஆ), அகநானூறு மூலமும் உரையும்
4. ஞா. மாணிக்கவாகன், சிலப்பதிகாரம்
5. துரைதண்டபாணி (உ.ஆ), மணிமேகலை தெளிவுரை
6. பதிப்பகக்குழு, திருக்குறள் உரையுடன்